BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ரிக் ஹான்ஸென் ஃபவுண்டேஷன் (Rick Hansen Foundation) வழங்குகின்ற அணுகத்தக்க தன்மைக்கான இலவச சான்றிதழ் பெறுவதற்கான தரவரிசைப்படுத்தலுக்காக, ப்ராம்ப்ட்டன் நகரில் இருக்கின்ற நிறுவன அமைப்புக்கள் விண்ணப்பிக்கலாம்

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 11, 2020) – மாற்றுத்திறன் கொண்ட மக்களுக்கு கட்டிடங்கள் எந்த வகையில் அணுகத்தக்கதாக இருக்கின்றன என்பது பற்றி தரவரிசை கொடுக்கின்ற ஒரு நிகழ்ச்சித்திட்டமாகிய ரிக் ஹான்ஸென் ஃபவுண்டேஷன் வழங்குகின்ற அணுகத்தக்க தன்மைக்கான இலவச சான்றிதழ் (Rick Hansen Foundation Accessibility Certification (RHFAC)) வழங்கப்படுகின்றது; இப்படிக் கிடைக்கவிருக்கின்ற இலவச சான்றிதழைப் பெறத் தகுதி கொண்ட பத்து உள்ளூர் நிர்வாக அமைப்புக்களில் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமும் ஒன்று என தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

மாநகரில் இருக்கின்ற, லாப நோக்கம் கொண்டிராத, பொதுத்துறை அல்லது தனியார் நிறுவனங்கள் இந்த இலவச RHFAC தரவரிசை கொடுக்கின்ற நிகழ்ச்சியில் பங்கேற்க ஊக்கம் கொடுக்கப்படுகின்றனர். இதன் மூலம் தங்கள் கட்டிடங்களில் நிலவும் அணுகல்தன்மையை அதன் உரிமையாளர்கள் புரிந்துகொண்டு அதற்கான மேம்பாடுகளை செய்வதற்கான வழிகளை இனம் காண முடியும். தர வரிசையில் மிக உயரிய இடத்தைப் பிடிக்கின்ற கட்டிடங்கள் ரிக் ஹான்ஸென் ஃபவுண்டேஷன் (Rick Hansen Foundation) வழங்குகின்ற அணுகத்தக்க தன்மைக்கான சான்றிதழ் பெறும் அல்லது தங்கம் என தரம் குறிக்கப்படும்.

இந்தப் புதிய இலவச RHFAC நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரிக் ஹான்ஸென் ஃபவுண்டேஷன் (Rick Hansen Foundation) உடன் சேர்ந்து, ஒன்ட்டேரியோ அரசும் நிதி உதவி அளிக்கிறது; இது சமுதாயத்தினரின் மிக நல்ல அணுகல்தன்மைக்கு உதவி புரிகிறது. தன்னகத்தே இருக்கும் மக்கள்தொகையின் அளவு மற்றும் பூகோளரீதியான பரந்துபட்ட தன்மைக்காக, ப்ராம்ப்ட்டன் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இலவச RHFAC தரவரிசைப்படுத்தலுக்கு ப்ராம்ப்ட்டன் மாநகரெங்கிலும் இருக்கும் 25 அமைவிடங்கள் தகுதி பெறும். இதற்காக, நிறுவன அமைப்புகள் மார்ச் 27 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டிய வலைத்தளம்: www.rickhansen.com/freerating.

RHFAC நிகழ்ச்சித்திட்டம் பற்றிய மேலும் தகவல்களுக்கு, வருகை புரியவும் www.brampton.ca

**முக்கிய அம்சங்கள்**

- RHFAC நிகழ்ச்சித்திட்டம் மூலமாக தரவரிசை கொடுக்கப்படும் நிறுவனங்கள், மதிப்பெண் வகையிலான தரவரிசை பெறுவார்கள் மற்றும் தாங்கள் வெற்றி கண்ட முக்கிய பகுதிகள் பற்றிய அறிக்கையையும் பெறுவதுடன், தங்கள் அமைவிடத்தை இன்னமும் மேம்படுத்துவது எப்படி என்ற அறிக்கையையும் பெறுவார்கள்.
- குடிமக்களைக் கொண்ட உறுப்பினர்கள் அடங்கிய ப்ராம்ப்ட்டன் நகர அணுகல்தன்மைக்கான ஆலோசனைக்குழுவானது, மே மாத இறுதி/ஜூன் மாத துவக்கத்தின் வாக்கில் அனைத்து RHFAC நிகழ்ச்சித்திட்ட விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்வார்கள். தங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டனவா என்பது ஜூலை 3, 2020 வாக்கில் விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்படும்.
- ப்ராம்ப்ட்டன் நகரில் வாழ்கின்ற, பணியாற்றுகின்ற, விளையாடுகின்ற, வருகை புரிகின்ற மற்றும் முதலீடு செய்கின்ற அனைத்து-வயது மற்றும் இயல்திறன் கொண்ட அனைத்து தரப்பு மக்களும் ஒரே மாதிரியான வாய்ப்புக்களை அடைவதை உறுதி செய்ய, ப்ராம்ப்ட்டன் மாநகரமும் அதன் அணுகல் தன்மைக்கான ஆலோசனைக்குழுவும் (Accessibility Advisory Committee) தங்களை அர்ப்பணித்துக்கொண்டுள்ளன.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டன் மாநகரமானது ஒரு வண்ணக்கலவை, மற்றும் மாற்றுத்திறன் கொண்ட மக்களுக்கான தடைகளை அகற்ற நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்; நமது வெவ்வேறு சமுதாயத்தின் ஊடாக அணுகல்தன்மையை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை இனம் காண்கிறோம். RHFAC நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்க ப்ராம்ப்ட்டன் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்பதில் நான் பரவசம் அடைகிறேன்; அனைவருக்கும் இந்த நமது நகரம் மிகவும் அணுகல்தன்மை கொண்டிருப்பதாக ஆக்குவதில் நமக்கு உதவும் வகையில் பங்கேற்க உள்ளூர் நிறுவனங்களை நான் உற்சாகப்படுத்துகிறேன்.”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் மாநகரம்*

“அணுகல் தன்மைக்கான ஆலோசனைக் குழுவில் ஒரு நகர் மன்ற பிரதிநிதியாக இருக்கும் நான், ப்ராம்ப்ட்டன் நகரை, அனைத்து வயது மற்றும் இயல்தன்மை கொண்ட மக்களுக்கான அணுகல்தன்மையை கொண்டதாக ஆக்குவதற்கான வேலைகளை நாம் செய்கிறோம் என்பதில் பெருமை கொள்கிறேன். RHFAC தரவரிசை வழங்குவதைப் பெறுவதற்கான இந்த இலவச வாய்ப்பின் மூலம் கிடைக்கும் அனுகூலத்தை அடைய, அனைத்து வகையான நிறுவன அமைப்புகளையும் நான் உற்சாகப்படுத்துகிறேன். தடைகளைக் களைவதன் மூலம், நமது நகரம் அனைத்தையும் கொண்டிருப்பதாகவும் அனைவரும் அணுகத்தக்கதாகவும் ஆகிறது; இதன் மூலம், நமது சமூகத்தினரிடையே மாற்றுத்திறன் கொண்ட மக்கள் முழுமையாக பங்குபெற இது உதவுகிறது .”

*- பேட் ஃபோர்ட்டினி, பிராந்திய கவுன்சிலர், வார்டு எண்கள் 7 மற்றும் 8; உறுப்பினர், அணுகல்தன்மைக்கான ஆலோசனைக் குழு; உறுப்பினர், ரீஜன் ஆஃப் பீல் அணுகல்தன்மைக்கான ஆலோசனைக் குழு*

"ஒன்ட்டேரியோ அரசிடமிருந்து கிடைக்கின்ற இந்த பெருந்தன்மையான நிதியுதவியானது, பல நிறுவன அமைப்புக்களும் தங்கள் கட்டிடத்தின் அணுகல்தன்மையைப் புரிந்துகொண்டு அதனை வெளிக்காட்ட உதவும்; மேலும் கட்டுமான சுற்றுச்சுழல் வகையில் தங்களின் எதிர்கால அணுகல்தன்மைக்கான திட்டங்களைத் தெரிவிக்கவும் இது உதவும். ஒன்ட்டேரியோவில் இருக்கும் முதியோர் மக்கள் தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வளர்ந்து வரும் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டபடி இந்த நகரை மாற்ற உதவுவதற்கு நிறுவன அமைப்புக்களுக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகும்.

*- ப்ராட் மெக்கேன்னல், உதவி தலைவர், அணுகல் தன்மை மற்றும் முழுமைத்தன்மை, ரிக் ஹான்ஸென் ஃபவுண்டேஷன்*

-30-

***கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.*** *நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம்.* Twitter, Facebook, *மற்றும்* Instagram *ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள்.* www.brampton.ca *இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.*

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca